1981 செப்டம்பர்]

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஆடுதுறையில் தற்போது நில ஆராய்ச்சி பண்ணை இருக்கின்றது. அங்கே வாழை ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறன்து. ஆடுதுறையை ஒட்டிய பகுதிகளில் தேவையான நன்செய், புன்செய் நிலங்கள் இருப்பதால் தமிழகத்திற்கு உணவு அளிக்கின்ற தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையை வேளாண்மைக் கல்லூரியாக மாற்ற அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆராய்ச்சிப் பண்ணை இருக்கும் இடத்திலேயெல்லாம் கல்லூரி அமைக்க முடியாது. வேளாண்மைக் கல்லூரியிலிருந்து 400 வேளாண்மைப் பட்டதாரிகள் ஆண்டுதோறும் வருகிறார்கள். அவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கொடுக்க முடிகிறது. அதிகப்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி இன்றுவரை வேளாண்மைப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இல்லையென்று கருதுகிறேன். எனவே, இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பி.எஸ்ஸி. (பாட்டனி), பி.எஸ்ஸி. (ஸுவாலஜி), படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். பி.எஸ்ஸி. (அக்ரி.) படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கலாம். எனவே, இதைப்பற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இன்றிருக்கின்ற நல்ல நிலையை நாளைக்குக் கெடுக்க வேண்டாம் என்பதுதான் அரசின் எண்ணம்.

குளத்தூர் தாலுகா பேரம்பூர் கிராமத்திலுள்ள பாலத்தினை புதுப்பிக்கும் திட்டம்.

*வினா எண். 149—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா களமாவூர்-விராலிமலை செல்லும் சாலையில் (பேரம்பூர் கிராமத்தில்) உள்ள பாலத்தை புதிதாக கட்ட மதிப்பீடு தயார்செய்து அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

[1981 செப்டம்பர் 1

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இவ்வாண்டு இப்பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு உள்ளது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் சுமார் பதினைந்தாண்டுகளாகப் பழுதடைந்து மிகவும் சிரமமாக இருக்கிறது, போக்குவரத்து இதனால் தடைப்பட்டுள்ளது. பஸ், லாரி, ஆகியவை அடிக்கடி செல்ல வேண்டிய ரோடாக அமைந்திருப்பதால் இதற்கு முன்னுரிமை கொடுத்து விரைவில் பணி தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1981–82—இரண்டாம் பாகத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இதற்காக 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் குளத்தின் கரை மீது அமைந்துள்ளதால் குளத்திலிருந்து தண்ணீர் வெளியேறாமலும், பாசன வசதி பாதிக்காமலும் பாலம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அவைகளை யெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இந்தப் பாலம் கட்டப்படும்.

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை பணியாளர்களை ஒரே தொகுதிமுறையின்கீழ் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண். 150—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை இலாகா பணியாளர் யாளர்களை 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் ஒரே தொகுதி முறையில் கொண்டுவரும்படி அரசு ஆணையிட்டுள்ளபடி செயல்முறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தாமதத்திற்கு என்ன காரணம் ?

(இ) எப்போதுமுதல் செயல்படுத்தப்படும் ?